# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2055 ● மே 4, 2024 Weekly E-paper ● May 4, 2024


# இதற்குப் பெயர்தான் சமூக நீதியா?



சுப. வீரபாண்டியன்

**குடிஅரசு 100**

வழக்கறிஞர் பா. மணியம்மை

**ஜூன் 4, வரலாறு மாறும்!**

தலையங்கம்

**பரப்புரை பயணக் காட்சி பாசிசம் வீழ்வதற்கான சாட்சி**

வழக்கறிஞர் இராம. வைரமுத்து

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2055 ● மே 4, 2024 Weekly E-paper ● May 4, 2024


# இதற்குப் பெயர்தான் சமூக நீதியா?

**சுப. வீரபாண்டியன்**

இந்தியாவில் மனித உரிமை மீறல்கள் மிகுதியாகிக் கொண்டே போகின்றன என்று அமெரிக்காவின் அறிக்கை ஒன்று கூறுகிறது. இதனை எதிர்த்தும், கண்டித்தும் பேசிய இந்திய வெளியுறவுத் துறைச் செயலாளர் ரந்தீர் ஜெய்ஸ்வால், இது ஒரு பாரபட்சமான அறிக்கை என்றும், இதில் எந்த நம்பகத்தன்மையும் இல்லை என்றும் சொல்லியிருக்கிறார்.

ஆனால் இந்தியாவில் வாழும் நாம் அன்றாடம் நிகழ்வுகளைப் பார்க்கிறோம். இந்த உண்மையைச் சொல்வதற்கு அமெரிக்கா தேவையில்லை. நமக்கே மிக நன்றாகத் தெரியும். மனித உரிமை மீறல்கள், கோடீஸ்வரர்கள் மேலும் மேலும் கோடீஸ்வரர்கள் ஆவது, ஏழைகள் பரம ஏழைகள் ஆவது - இவைதான் இந்தியாவின் இன்றைய நிலையாக உள்ளது.

இதற்கெல்லாம் ஆளும் அரசு தான் காரணம். என்றாலும் அந்த அரசைப் பின்னிருந்து இயக்குகின்றவர்கள் பெரும்பாலும் அதிகாரிகளாக இருக்கிறார்கள். அதிலும் குறிப்பாக கேபினட் அதிகாரிகளாக இருக்கின்றவர்கள் தான் பல முடிவுகளை இந்தியாவில் எடுக்கிறார்கள்.

அவர்கள் யார்?

அவர்களைப் பற்றிய ஒரு புள்ளி விவரத்தை ராகுல் காந்தி அண்மையில் வெளியிட்டு இருக்கிறார். இந்திய ஒன்றிய அரசின் கீழ் கேபினட் அதிகாரிகளாக 90 பேர் இருக்கிறார்கள். இவர்களில் மூன்று பேர் மட்டுமே, இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்கள் .

இந்தப் புள்ளி விவரம் எவ்வளவு பெரும் அதிர்ச்சியைத் தருகிறது என்று எண்ணிப் பார்க்க வேண்டும்.



அம்பானிகளும், அதானிகளும் 15 லட்சம் கோடி ரூபாய் வரியைக் கட்ட வேண்டியது இல்லை என்று இவர்கள்தான் முடிவு எடுக்கிறார்கள். 188 பொதுத்துறை நிறுவனங்களில் இதுவரை 23 நிறுவனங்கள் விற்பனை செய்யப்பட்டதற்கும், இனியும் விற்பனை செய்வதற்கு ஒரு பட்டியல் அணியமாக இருப்பதற்கும் பின்புலத்தில் இவர்கள்தான் இருக்கிறார்கள்.


பெட்ரோல், டீசல் விலையை உயர்த்தி, ஏழை, நடுத்தர மக்களை நசுக்கிக் கொல்பவர்கள் இவர்கள்தான். விமான நிலையங்களை அதானிகளுக்கும், டாட்டாகளுக்கும் விற்பதற்கான யோசனை இவர்களிடம் இருந்துதான் வருகின்றது.

பிற்பட்ட வகுப்பிலிருந்து ஒரு பிரதமரும், பழங்குடியிலிருந்து ஒரு குடியரசுத் தலைவரும் பாஜகவினால் நியமிக்கப் பட்டிருக்கின்றனர் என்று சொல்லிச் சிலர் கூத்தாடுகிறார்கள். உண்மைதான், நம் விரலைக் கொண்டுதான் நம் கண்களை இவர்கள் குத்துவார்கள். ஓர் இஸ்லாமியரை, ஒரு பட்டியலினத்தைச் சார்ந்தவரை, ஒரு பழங்குடி வகுப்பினரைக் குடியரசுத் தலைவராக ஆக்கி விடுவது பெருமை இல்லை! அது ஒரு தந்திரம். கேபினட் அதிகாரிகளில் பொதுப்போட்டிக்கு உரியவர்கள் மட்டுமே மிகக் கூடுதலான எண்ணிக்கையில் அமர்த்தப்படுவது சமூக அநீதி!

அந்த அநீதியைத்தான் இந்த ஒன்றிய அரசு தொடர்ந்து செய்து கொண்டே இருக்கிறது. இந்தக் கொடுமையில் இருந்து மீள்வதற்கு, சமூக நீதியை நிலை நாட்டுவதற்கு, ஜூன் 4 வழி வகுக்கட்டும்!

# குடிஅரசு 100

வழக்கறிஞர் பா. மணியம்மை, திராவிடர் கழகம்.




இந்த உலகில் உள்ள உயிரினங்களுக்கு இல்லாத தனிச்சிறப்பு மனித இனத்திற்கு மட்டுமே உள்ளது. அதுதான் சிந்திக்கும் திறன். ஆறாம் அறிவு விலங்குகளை அடித்தால், வலியால் அழும். ஆனால் ஒரு மனிதனை இன்னொரு மனிதன் தாக்கினால் உடனே வரும் கோபத்தின் பெயர்தான் சுயமரியாதை. நம் நாட்டில் அந்த சுயமரியாதை சாமானிய மக்களுக்கு கிடைக்காமல் வைத்திருந்தது ஆதிக்கம் உள்ள ஆரிய சனாதனக் கூட்டம்.

அக்கூட்டம் சிந்திக்கும் திறனை அடக்கி வைத்திருந்தது. எதையும் கேள்வி கேட்கக் கூடாது. இதுதான் பாரம்பரியம், கலாச்சாரம், பண்பாடு. இதை எல்லாம் மகான் சொன்னார், ரிஷி சொன்னார், கடவுள் சொன்னார் என்று பல ஆண்டுகளாக மக்களை அடிமையாகவே வைத்திருந்தது ஆரியக் கூட்டம். நம் மக்கள் மீது திணிக்கப்பட்ட அடிமை விலங்கை உடைக்க வீழ்ச்சியுற்ற இனத்தை எழுச்சி பெறச் செய்தவர் தந்தை பெரியார்.

## ‘மே’ நாளும் திராவிட இயக்கமும்

உள்ளதைப் பங்கிட்டு உண்பது,
உழைப்பைப் பங்கிட்டுச் செய்வது,
என்ற நிலை ஏற்பட்டுவிட்டால்
பிறகு கடவுளுக்கு வேலையோ அவசியமோ இருக்காது!"

**- தந்தை பெரியார்.**

தமிழ்நாட்டில் முதன்முதலாக ‘மே’ நாளைக் கொண்டாடச் செய்தவர் பெரியார்!

கம்யூனிஸ்ட் அறிக்கையை முதன்முதலில் தமிழில் மொழிபெயர்த்து வெளியிட்டவர் பெரியார்!

உழைப்புக்கும் உழைப்பாளிக்கும் எதிரான பார்ப்பன கல்லு முதலாளித்துவத்தை எதிர்த்து வெற்றிபெற்றவர் பெரியார்!

உழைப்பைத் தீட்டாகத் தள்ளிவைக்கும் பார்ப்பன சனாதன எதிர்ப்பை நாடெங்கும் பற்றிப் போட்டவர் பெரியார்!

விவசாயத் தொழிலாளர் சங்கங்களை அமைத்து ஜாதி ஆதிக்கப் பண்ணை முதலாளித்துவத்தை அடித்து நொறுக்கியவர் பெரியார்!

உழைப்பாளர் நாளுக்கு ஊதியத்துடன் விடுமுறை அறிவித்தவர் கலைஞர்!

தொழிலாளர் நலவாரியம் அமைத்தவர் கலைஞர்!

தொழிலாளர் நலச் சட்டங்களை இயற்றியவர் கலைஞர்!

குத்தகைதாரர் சட்டம், குறைந்தபட்சக் கூலி நிர்ணயச் சட்டம் இயற்றியவர் கலைஞர்!

**–காசு. நாகராசன்** (இணையத்தில்)

தமிழர்கள் மீது பார்ப்பனியம் தொடுத்தப் பண்பாட்டுப் போரைத் தடுத்து நிறுத்தி அதில் வெற்றி கண்ட ஒரே தலைவர் பெரியார். தனக்குக் கிடைத்த உரிமைகள் அனைத்தும் மற்றவர்களுக்கும் கிடைக்க வேண்டும் என்பதற்காகத் தொடங்கப்பட்ட இயக்கத்தின் பெயர்தான் சுயமரியாதை இயக்கம். அந்த சுயமரியாதை இயக்கத்தின் நூற்றாண்டு விழாவும், சுயமரியாதை இயக்கத்தின் கொள்கைகளை விளக்குவதற்காக உருவாக்கப்பட்ட "குடிஅரசு" இதழின் நூற்றாண்டு தொடக்க விழாவும் மிகச் சிறப்பாக நாடு முழுவதும் கொண்டாடப்பட வேண்டும்.

பொதுவாக பத்திரிகைச் செய்தி என்பது இன்றைய செய்தி, நாளைய வரலாறு என்பார்கள். ஆனால் குடிஅரசு நாளைய வரலாற்றை இன்றைக்கே எழுதியது என்பதுதான் சிறப்பு. இன்றைக்கு நம் தமிழ்நாட்டில் இருக்கும் தனித்துவம் வாய்ந்த முன்மாதிரியான சட்டங்களும், திட்டங்களும் தந்தை பெரியாரின் சுயமரியாதை இயக்கத்தின் மூலமாக வந்தவையே.

சுயமரியாதை இயக்கம் தோன்றுவதற்கு முன், 500 ஆண்டுகளுக்கு முன் தமிழ்நாட்டில் கல்வியின் நிலை எப்படி இருந்தது என்பதை பொலிடிக்கல் கேரியர் ஆஃப் பெரியார் ஈ. வி. ராமசாமி என்ற நூலில் “மதுரையில் 10 ஆயிரம் மாணவர்கள் படித்தனர். ஒவ்வொரு வகுப்பிலும் 200 முதல் 300 மாணவர்கள் இருந்தனர். அவர்கள் எல்லோரும் பார்ப்பனர்களே” என்ற தகவலை ராபர்ட் என்ற பாதிரியார் தந்துள்ளார். இத்தகைய அநீதிக்கு முடிவு கட்டியவர் தந்தை பெரியாரும் சுயமரியாதை இயக்கமும்.

பிள்ளைகள் கொடுத்தது பகவான். அதனால் பிள்ளைகளைப் பெற்று வளமோடு நலமோடு கவனிக்க வேண்டிய கடமை பெண்களுக்கு மட்டுமே உண்டு என்று பெண்களை அடிமையாக வைத்த காலத்தில் சுயமரியாதை இயக்கம் அதை எதிர்த்துக் கடுமையாக போராடியது. கோவில் திருமணம் போன்ற நிகழ்வுகளில் கூட பெண்கள் நாற்காலியில் அமரக்கூடாது. ஆண்கள் மட்டுமே நாற்காலியில் அமர வேண்டும் பெண்கள் தரையில்தான் உட்கார வேண்டும். இப்படி ஏற்றத் தாழ்வுகளோடு இருந்த சமூகத்தை மாற்றி அமைக்க பாடுபட்ட இயக்கம் தான் சுயமரியாதை இயக்கம்

எந்த காங்கிரஸிலிருந்து இட ஒதுக்கீடு கேட்டு வெளியேறினாரோ அதே காங்கிரஸ் இன்றைக்கு நாங்கள் மீண்டும் ஆட்சிக்கு வந்தால் இடஒதுக்கீடு அனைவருக்கும் வழங்குவோம், 50% என்கின்ற உச்சவரம்பை நீக்குவோம் என்று வரலாற்றுச் சிறப்புமிக்க தேர்தல் அறிக்கையைக் கொடுத்திருக்கிறது. எந்தப் பெண்களுக்காகக் கல்வி, வேலை வாய்ப்பு வேண்டும் என்று சுயமரியாதை இயக்கம் கேட்டதோ அந்தக் கொள்கையைத் தேர்தல் அறிக்கையில் சொல்லி உள்ளது காங்கிரஸ். தந்தை பெரியாரின் கொள்கை என்றைக்கும் தோல்வி அடையாது. வெற்றி பெற்றே தீரும்!

●

தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!

# கருஞ்சட்டைத் தமிழர்

## ஜூன் 4, வரலாறு மாறும்!

எந்த ஆண்டும் இல்லாத அளவுக்கு இந்த ஆண்டில் கோடை வெயில் கொதிக்கும் வெயிலாக சுட்டு எரித்துக்கொண்டு இருக்கிறது.

108 டிகிரியைத் தாண்டியும், வெப்பம் அலை அலையாய் இருப்பதைப் பார்க்கிறோம்.

உண்மையில் இந்தக் கொடும் வெப்பத்தைக் கூட தாங்கித் தற்காத்துக் கொள்ளலாம்.

ஆனால் பிரதமர் என்ற நாட்டின் உயர்ந்த பதவியில் இருக்கும் மோடியின் வாயில் இருந்து வரும் வெப்ப அலைப் பேச்சைத் தான் தாங்கிக்கொள்ள முடியாததாக இருக்கிறது.

இந்தியா கூட்டணி வெற்றிபெற்றால், காங்கிரஸ் இடஒதுக்கீட்டை ஒழித்துவிடும் என்கிறார் மோடி.

தொடக்கத்தில் இருந்தே இடஒதுக்கீடுக்கு எதிராகச் செயல்படும் அரசு பா. ஜ.கவின் மோடி அரசுதான் என்பதை மக்கள் அறிந்து வைத்துள்ளார்கள்.

இப்பொழுது தேர்தல் பிரச்சாரங்களில் முதலைக் கண்ணீர் வடிக்கும் மோடிக்கு காங்கிரஸ் ஆட்சியில்தான் ஓபிசி யினருக்கு 27 சதவீதம் இடஒதுக்கீடு கொடுத்தார்கள் என்பது தெரியாதா?

இரண்டு மாடுகள் வைத்திருந்தால் அதில் ஒன்றைப் பிடுங்கி ஊடுருவி வந்த (முஸ்லிம்களுக்கு) காங்கிரஸ் கொடுத்து விடுமாம்! சொத்து உள்ளவர்களிடம் இருந்து பாதி சொத்தைப் பிடுங்கி அவர்களுக்குக் கொடுத்து விடுவார்களாம்!

இதுபோன்ற மலிவான, மதவாத, பிரிவினை, வெறுப்புணர்வுப் பேச்சுகள் ஒரு பிரதமரிடம் இருந்து வரலாமா?

கடந்த 10 ஆண்டுகளில் என்ன செய்தார்கள் மக்களுக்கு என்பதைப் பேசாமல், போகிற இடங்களில் எல்லாம் பொய்களையும், பிரிவினை, வெறுப்பு வாதங்களையும் பேசிக்கொண்டு இருபது பிரதமர் என்ற பதவிக்கு அழகல்ல.

'நுணலும் தன் வாயால் கெடும்' என்று சொல்வதைப் போல, மோடியும் தன் வாயால் மதிப்பை இழந்து கொண்டு வருகிறார்.

குஜராத், ராஜஸ்தான் உள்ளிட்ட வட மாநிலங்களில் மோடியின் செல்வாக்கு வீழ்ச்சி அடைவதால், மக்கள் அங்கு பா.ஜ.கவுக்கு எதிராகத் திரள்வதால் தோல்வி பயத்தின் உச்சிக்குப் போய்விட்டார் மோடி என்பதன் அடையாளம், மோடியின் அனல் நிறைந்த வெப்ப அலைப் பேச்சில் இருந்து தெரிய வருகிறது.

ஜூன் 4, வரலாறு மாறும். பா.ஜ.கவின் அனல் பேச்சும் சரியும், ஆட்சியும் வீழும்.

இந்தியா கூட்டணியின் ஆட்சி அன்று உதயமாகும்!

ஆசிரியர்:
சுப.வீரபாண்டியன்
பொறுப்பாசிரியர்
எழில்.இளங்கோவன்
ஆசிரியர் குழு:
வெற்றிச்செல்வன்
சாரதா தேவி
வெளியீடு:
திராவிட இயக்கத் தமிழர் பேரவை

இணையதளம்:
www.keetru.com,
www.karunchattaibooks.com
மின் அஞ்சல்:
karunchattai@gmail.com
டுவிட்டர்: suba_vee
தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு,
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை- 600 024,
தொலைபேசி: 044-2472 6408






பேரவைத் தலைமை அலுவலகத்தில் 29-04-2024 அன்று புரட்சிக் கவிஞர் பாரதிதாசனாரின் பிறந்த நாளில் அவரின் படத்திற்குத் தோழர்கள் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள்.

# பரப்புரை பயணக் காட்சி பாசிசம் வீழ்வதற்கான சாட்சி

வழக்கறிஞர் இராம. வைரமுத்து

இந்திய நாடாளுமன்றத் தேர்தலில் தற்போது நடைபெறும் 18 வது நாடாளு மன்றப் பொதுத்தேர்தல் மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்ததாகும். இந்திய ஒன்றியத்திற்கு இனியும் தேர்தல் நடைமுறை வேண்டுமா அல்லது சர்வாதிகார ஒற்றை ஆட்சி வேண்டுமா என்பதை முடிவு செய்கிற தேர்தல் இது. மக்களாட்சியின் மாண்பினைக் காக்கும் மாபெரும் பொறுப்பு நமக்கு இருப்பதால் தி.மு.க தலைமையிலான இந்தியா கூட்டணிக்கு ஆதரவளிப்பதாக திராவிட இயக்கத் தமிழர் பேரவை தலைவர் பேராசிரியர் சுப. வீரபாண்டியன் அவர்கள் அறிவித்தார். அவரது பரப்புரை நிரலை தி.மு.க தலைமைக் கழகம் வெளியிட்டது. அதன்படி அவர் 10 நாட்களில் 9 தொகுதிகளில், 2076 கி.மீ பயணம் செய்து, 15 வாகனப் பரப்புரைகள், 3 பரப்புரைக் கூட்டங்களுடன் 2 பொதுக் கூட்டங்களில் பங்கேற்று தி.மு.க கூட்டணிக்கு மக்களிடம் ஆதரவு திரட்டினார்.

சிவகங்கை, மதுரை, தேனி, விருதுநகர், திருநெல்வேலி, தூத்துக்குடி, கோவை, திருப்பூர் மற்றும் திண்டுக்கல் நாடாளுமன்றத் தொகுதிகளில் பேரா. சுப.வீ அவர்கள் மேற்கொண்ட பரப்புரை நிகழ்வுகளில் அவருடன் பொதுச் செயலாளர் சிற்பி செல்வராஜ், திராவிட நட்புக் கழகத் தலைவர் சிங்கராயர், பேரவை துணைப் பொதுச் செயலாளர் கா.சு.நாகராசன், தெற்கு மாவட்டங்களில் பங்கேற்று உரையாற்றினோம். பத்தாண்டு மோடி ஆட்சியின் அவலங்களையும், தமிழ்நாட்டிற்கு விடியலைத் தந்து மூன்றாண்டுகளாய் நல்லாட்சி நடத்தி வரும் திராவிட மாடல் நாயகர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சாதனைகளையும் மக்களுக்கு எளிதில் புரியும் வண்ணம் பேரா. சுப.வீ அவர்கள் எடுத்துரைத்தார்.

சிவகங்கை நாடாளுமன்றத் தொகுதி சாலைகிராமம் பரப்புரைக் கூட்டத்தில் காங்கிரஸ் வேட்பாளர்






கார்த்திக் சிதம்பரம் "பா.ஜ.க செய்யும் வட இந்திய மேல்சாதி சமஸ்கிருத சைவ உணவு முறை இந்துத்துவா அரசியல்" என்பது குறித்து உரையாற்றி, இது பற்றி பேராசிரியர் சுப.வீ அவரகள் முன் பேச வேண்டும் என்பதற்காகவே தனது வாக்கு சேகரிப்பை விரைவாக முடித்து விட்டு இந்த பரப்புரைக் கூட்டத்திற்கு வந்ததாக அவர் குறிப்பிட்டது நெகிழ்வாக இருந்தது.

தேனி நாடாளுமன்றத் தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் உரையாற்றிய பேரா. சுப.வீ அவர்கள் பா.ஜ.க கூட்டணி வேட்பாளரின் சிங்கப்பூர் குடியுரிமையை அம்பலப்படுத்தி அவரது முகமூடியை கிழித்தெறிந்தார். பேரா. சுப.வீ. தலைவர் கலைஞர் அவர்களின் நினைவிடத்தை தகர்க்க கடப்பாரையோடு வருவேன் என்று வெற்றுக் கூச்சலிட்ட வீணருக்கு சுப.வீ விடுத்த கடும் எச்சரிக்கை மக்களிடம் வரவேற்பைப் பெற்றது. பரப்புரை நிறைவு நாள் திண்டுக்கல் பொதுக்கூட்டம் ஒரு மாநாட்டின் உணர்வை ஏற்படுத்தியது.

பரப்புரைக் குழுவில் தோழர்கள் சொக்கலிங்கம், மணி, பிரவீன், மூசா, ஸ்டூடியோ சரவணன் உள்ளிட்டோர் இடம்பெற்றிருந்தனர். அவர்களுடன் அந்தந்த பகுதிப் பொறுப்பாளர்கள், தோழர்கள் இணைந்து கொண்டனர். ஓய்வு நேரங்களில் பேரா. சுப.வீ அவர்களுடனான உரையாடல் ஒரு பயிற்சிப் பாசறையாக அமைந்தது.

அ.இ.அ.தி.மு.கவுக்கு ஆதரவாக இருக்கும் பெண்கள் வாக்கு வங்கி முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் மகளிர் நலத் திட்டங்களால் முற்றிலும் தி.மு.கவுக்கு ஆதரவாக மாறியிருந்தது. தமிழ்நாட்டின் திராவிட மாடல் ஆட்சியினால் பலன் பெறாத ஒருவர் கூட இல்லை என்ற நிலையை பயணத்தில் காண முடிந்தது. இந்திய ஒன்றியத்தை ஆளும் பாசிச பா.ஜ.கஆட்சியை வீழ்த்திடும் முடிவில் மக்கள் உறுதியாக இருக்கிறார்கள் என்ற உண்மையை இந்த பரப்புரை பயணம் உணர்த்தியது. ●

Published By Dravida Iyyakka Tamilar Peravai. Editor Suba. Veerapandian